

ஒன்றிய அரசு நீட்டை ரத்து செய்ய வலியுறுத்தி திராவிட மாணவர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடைபெற்றது. இதில் இந்தியா கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டனர்.


விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியத்தில் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.அமைச்சர் க.பொன்முடி தலைமையில் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., முன்னிலையில் பொன். கௌதம சிகாமணி வரவேற்புரையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். இதில் 'இந்தியா' கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### ரூ.4,181 கோடியில் – வடசென்னையை

# வாடாத சென்னையாக்க முதல்வர் தீவிர நடவடிக்கை!

## திட்டப்பணிகளை ஆய்வு செய்த அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!



சென்னை, ஜூன் 20-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி நேற்று (19.6.2024) இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு வட சென்னை வளர்ச்சித் திட்டப் பணிகளை துரிதப்படுத்தும் விதமாக பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்5, வால்டாக்ஸ் ரோடு, அண்ணா பிள்ளை தெருவில் புதியதாக அமையவுள்ள சமுதாய நலக்கூடம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய இடங்களை கள ஆய்வு மேற்கொண்டார்.

இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் உயிரினும் மேலான திராவிட முன்னேற்றக் கழக தலைவர் ஆட்சி பொறுப்பேற்ற நாளிலிருந்து வட சென்னையினுடைய அடிப்படை தேவைகளை மக்களுடைய பயன்பாட்டுக்கு ஏற்றார் போல் உருவாக்க வேண்டும் என்ற திட்டமிட்டு அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து முழுமையாக முடித்து விடப்பட்டு வடசென்னை வாடாத சென்னையாக்க வேண்டும் என்ற குறிக்கோளோடு பல்வேறு பணிகளை இந்த மூன்றாண்டு காலம் மேற்கொண்டு வருகின்றார்.

அதன்ஒரு தொகுப்பாக இந்த ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் தேதி சென்னை தங்கசாலையிலே வட சென்னை வளர்ச்சி திட்டம் என்று அறிவித்து அதற்கு சுமார் 4181 கோடி ரூபாயை பல்வேறு துறைகளில் இருந்து ஒதுக்கீடு செய்தார். அந்த 4,181 கோடி ரூபாயில் மேற்கொள்ளப்பட வேண்டிய 219 பணிகளையும் உறுதி செய்து அந்த பணிகளை விரைவுப்படுத்துவதற்காக பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து பல்வேறு வளர்ச்சி பணிகளை நேரடியாக களத்திற்கு சென்று ஆய்வு செய்து அந்த வளர்ச்சி பணிகளை 2025 ஆம் ஆண்டுக்குள் நிறைவு செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் இன்றைக்கு சென்னை பெருநகர ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் அவர்களும் நம்முடைய பெருநகர மேயர் திருமதி.ஆர்.பிரியா அவர்களும் எங்கள் துறையினுடைய செயலாளர் திருமதி.காகர்லா உஷா அவர்களும், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா அவர்களும் மாநகராட்சி கூடுதல் ஆணையர் மற்றும் வட்டார துணை ஆணையர் அவர்களும் இன்றைக்கு இந்த பணிகளை மேற்பார்வையிட்டிருக்கிறோம்.

இன்று காலை நாங்கள் மேற்பார்வையிட்ட பணிகள் சாலை ஓரமாகவும் கால்வாய் ஓரமாகவும் குடியிருக்கின்ற மக்களுக்கு மாற்று நிரந்தர குடியிருப்பை ஏற்படுத்துவதற்காக சென்னை பெருநகர மாநகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் இல்லாத இடத்தை கேட்டிருக்கின்றோம். அந்த இடத்தை இன்றைக்கு கள ஆய்வு மாநகராட்சி ஆணையரோடு மேற்கொண்டு இருக்கின்றோம். அதே போல் இந்த தொகுதியிலே வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கின்ற மக்கள் அதிகமாக இருப்பதால் தனியார் பள்ளிகளில் சேர்ந்து அதிக கட்டணம் கொடுத்து படிக்க முடியாத சூழ்நிலை இருப்பதால் வால்டாக்ஸ் சாலையிலே அமைந்து இருக்கின்ற ஒரு உயர்நிலை பள்ளியை மேம்படுத்துதல், புதியதாக இந்த காலத்திற்கு ஏற்றால்போல் நவீனமயமாக்கின்ற பணியை மேற்கொண்டிருக்கிறோம், அதையும் இன்று பார்வையிட்டிருக்கிறோம்.

இந்த பகுதியிலே விளையாட்டு திடல் என்பது பெரிதாக இல்லை என்பதால் வடச்சென்னை வளர்ச்சி திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்ற இந்த சென்னை மாநகராட்சி சொந்தமான இந்த விளையாட்டு திடலோடு சேர்த்து இன்னும் கூடுதலாக ஒன்றறை ஏக்கர் நிலத்தை மாநகராட்சியிடம் பெற்று அதை முழுவதுமாக வடிவமைத்து அனைத்து வகையான விளையாட்டுகளையும் இந்த விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு வீரர்கள் பயன்படுத்தி கொள்வதற்கு ஏற்ற வகையில் உருவமைப்பதற்கும் இன்றைக்கு ஆய்வினை மேற்கொள்ள இருக்கிறோம். இந்த பணிகள் எல்லாம் வெகுவிரைவில் மூன்று மாதம் / நான்கு மாத காலத்திற்குள் தொடங்கப்பட்டு 2025 ஆண்டு இறுதிக்குள் இந்த பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருகின்ற பணிகளை மேற்கொண்டு இருக்கின்றோம்.

வடசென்னையினுடைய வளர்ச்சி திட்ட பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் தொடர் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி நேரடியாக தன்னுடைய கண்காணிப்பிலே வைத்திருக்கின்றார். அவர்களுடைய அந்த சுழற்சி முறையான பணிகளுக்கு ஈடாக நாங்களும் உறுதுணையாக இருந்து இந்த பணிகளை தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு பணிகளை துரிதப்படுத்துவதற்கு அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து இது போன்ற ஆய்வுகளை தொடர்ந்து மேற்கொள்வோம்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா ராஜன், கூடுதல் தலைமைச் செயலர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, மண்டலக் குழுத்தலைவர் ஸ்ரீராமுலு, மண்டல அலுவலர் தமிழ்ச்செல்வன், மாமன்ற உறுப்பினர் ராஜேஸ் ஜெயின் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

# திராவிடத்தின் மூத்த குயில்! எங்கே எங்கே?

**(உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் 19 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று - 20.6.2024)**



சிக்கலிலே பிறந்தவரே!
ஐயா! எங்கள்
சீர்திருத்தப் பெருங்கவியே!
சிலபேர் தங்கள்
முக்கலையும் முனகலையும்
பாடல் என்று
முத்தமிழை வதைத்துக்கொண்
டிருந்த நேரம்
விக்கலுக்குத் தண்ணீர்போல்
கவிதை தீட்டி
விதம்விதமாய் உவமைகளில்
புதுமை காட்டித்
தக்கபுகழ் கொண்டவரே!
விண்மீன் கூட்டத்
தமிழ்வானில் முழுநிலவே!
மறைந்தா போனீர்?

சர்க்கரைத்" தேன் மழை" பொழிந்தும்
"அமுதும் தேனும்"
சந்தங்க ளில்பிழிந்தும்
தமிழன் னையைச்
சொக்கவைத்த கவிச்சிகரம்!
ஆமாம், நீங்கள்
"சுவரும்சுண் ணாம்பும்" அல்ல
உதிர்வ தற்கு!
பக்குவத்தில் பழுத்தவரே!
பண்பின் ஊற்றே!
பாவேந்தர் பரம்பரைக்குத்
தலைமை தாங்கித்
திக்கனைத்தும் சுற்றிவந்த
கவிதைக் கோவே!
திரும்பிவராத் திசைநோக்கிப்
பறந்தா போனீர்?

"உருக்குலையா மங்கைஒளி
முகத்தை.." என்றே
உயிரோட்டக் கவிவரிகள்
அன்று தீட்டித்
திருக்குவளைத் திருமணத்தில்
தலைவ ருக்குத்
தித்திக்கும் வாழ்த்துகளைத்
தெளித்தீர்! எந்த
நெருக்கடிகள் வந்தாலும்
"கலைஞர்" அந்த
நிகழ்ச்சியினை மறக்காமல்
நேசித் தாரே!
கருக்கலிலே கண்விழிக்கும்
குவளை என்றீர்!
கண்விழிக்க மறந்துவிட்டேன்
உறங்கிப் போனீர்?

கன்னடத்தில் "தங்கவயல்"
கவிய ரங்கில்
"கவிஞர்களின் பொற்காலம்
கலைஞர் காலம்!
மன்னர்மகா மன்னர்களின்
காலத் துக்கும்
மகத்தான காலம்இது!"
என்று நீங்கள்
பொன்னுருக்கி வார்த்தாற்போல்
பொழிந்த நேரம்
பொங்கியதே கைத்தட்டல்
அலைகள்! அந்த
மின்னொளியின் எழில்வடிவம்
கண்முன் வந்து
மேடைகட்டி நிற்கிறதே!
என்ன செய்வோம்?

வந்தாரை வரவேற்று
மகிழும் நெஞ்சும்
வாசல்வரை வந்துவழி
யனுப்பும் பாங்கும்
நந்தாவி ளக்கொளியின்
சிரிப்பும், சோழ
நாட்டுக்கே உரியவிருந்
தோம்பற் பண்பும்
சிந்தாமல் சிந்தும்நகைச்
சுவையும், மேனிச்
சிவப்புக்கு மெருகூட்டும்
கருப்புத் துண்டும்
அந்தோ!வே றெங்கிந்த
அழகைக் காண்போம்?
அழுகின்ற தமிழன்னை
குரல்கேட் டீரோ?

பறக்கின்ற விமானத்தில்,
மிதக்கும் கப்பற்
பயணத்தில், புகைவண்டித்
தொடரில் என்று
சிறக்கின்ற வகையெல்லாம்
தமிழ்சி றக்கச்
செய்தீரே! கவிஞர்களின்
கூட்டத் தோடு!
இறைக்கட்டும் கண்ணீரை
விழிகள் என்றே
ஏன்இன்று தனிப்பயணம்
மேற்கொண் டீர்கள்?
அறுக்கட்டும் இதயத்தைச்
சோகம் என்றே
"ஆடிஅடங் கும்வாழ்வை"
மெய்ப்பித் தீரோ?

பூமலரும் முகமெங்கே?
துயரில் கூட
புன்னகைக்கும் இதழெங்கே?
தேன்வ ழிந்து
பாமலரும் கவிஇதயம்
எங்கே? எங்கள்
பகுத்தறிவுச் சிங்கத்தின்
செம்மாப் பெங்கே?
நாமலரும் போதெல்லாம்
தமிழ்ம ணக்க
நடைபோட்ட தன்மானக்
கவிஞன் எங்கே?
தேமதுரத் தமிழ்கூவி
உலக ளந்த
"திராவிடத்தின் மூத்தகுயில்"

எங்கே? எங்கே?

கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**



"ஒப்பாரும் மிக்காரும்
என்று மில்லா
உயர்கவிஞர் என்நண்பர்
சுரதா! யாரும்
தப்பாக அவர்பற்றிப்
பேசு வாரேல்
சகியேன்!" என் றுரைப்பாரே
கலைஞர்! அந்த
நட்புக்கோர் இலக்கணமாய்
வாழ்ந்து காட்டி
நடுகல்லில் புகழ்நாட்டி,
மறைந்த பின்னும்
எப்போதும் வாழ்கின்றீர்
எங்க ளோடு!
என்றும்எங்கள் நினைவலைகள்
உங்க ளோடு!

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்**
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | மே.பொ/கொ&நி/வ.செ.அ.மி.நி-1 | 01, 04 | 2 |
| 2 | மே.பொ/கொ&நி/வ.செ.அ.மி.நி-2 | 39, 47, 55, 59, 64 | 5 |
| 3 | த.பொ./செ/தெற்கு | C.886 | 1 |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in
செ.ம.தொ.இ/2010/ஒப்பந்தப்புள்ளி/2024

**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - திட்ட சரகம் (ஊரகம்)**
மேற்பார்வை பொறியாளர், திட்ட சரகம் (ஊரகம்)
485, MTB கட்டிடம், 2வது தளம், அண்ணா சாலை,
நந்தனம், சென்னை – 600 035. மின் அஞ்சல்: sespc1@gmail.com

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்: SE/PC(R)/DB/08/2024-25 நாள்: 19.06.2024**

| வேலையின் பெயர் | வேலையின் தோராய மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தாலுகா, தோப்பூர் கிராமத்தில் புல எண்.89/4A, 89/8A1–ல் வணிக வளாகம் (பிளாக் 1 – Ground + 4 Floors, பிளாக் - 2 Stilt + 4 Floors) கட்டுமானத்தில் மின்தூக்கி ஏற்பாடுகளை வழங்குதல் | ரூ. 130.48 ( incl GST @ 18%) |

1. ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏனைய ஆவணங்களுக்கு https://tntenders.gov.inல் தெரிந்து கொள்ளவும். 2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கும் காலம் மற்றும் சமர்ப்பிக்கப்படுவதற்கான **நாள் மற்றும் நேரம் 28.06.2024 காலை 11.00 மணி முதல் 12.07.2024 காலை 11.00 மணி வரை.** 3. ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் திறக்கப்படும் **நாள் மற்றும் நேரம் 12.07.2024 மாலை 3.00 மணி.** 4. விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் காணலாம்.
**மேற்பார்வை பொறியாளர், திட்ட சரகம் (ஊரகம்).**
**செ.ம.தொ.இ/1993/ஒப்பந்தப்புள்ளி/2024**

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 10**
ம.அ.ந.க.எண்.A2 / 1539 / 2024
**E - ஒப்பந்தப்புள்ளி**
பணி : மண்டலம் - 10, பகுதி - 29, கோட்டம் - 130 வடபழனி அம்மன் கோவில் தெருவில் உள்ள **OSR** நிலத்தில் புதியதாக பூங்கா அமைக்கும் **(தியாகராய நகர் சட்டமன்ற தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நிதி)** பணி. பணிக்கான மதிப்பு தொகை ரூ.61.81 இலட்சம் மட்டும்.
**முன்வைப்புத் தொகை : ரூ.62,000/- பணியின் அலுவலக மதிப்பிற்கு 1 சதவீதம்**
ஒப்பந்ததாரர்கள் **https://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். ஒப்பம் பதிவேற்றம் செய்யும் நாள் மற்றும் நேரம் **04.07.2024** அன்று மாலை **3.00** மணி வரை. ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **05.07.2024** அன்று மாலை **3.30** மணிக்குள் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.
**மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் – ம – 10**
செ.ம.தொ.இ / 2019 / ஒப்பந்தப்புள்ளி / 2024

### இ.ரவிகுமார் தலைமை ! ஜே.ஜே.எபினேசர் - எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலை !

# சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் கல்வி உபகரணங்கள்!

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வழங்குகிறார் ! கலாநிதி வீராசாமி பங்கேற்பு!

சென்னை, ஜூன் 20-

சென்னை வடக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல் நிகழ்ச்சி நாளை (21.06.2024 வெள்ளிக்கிழமை) கிழமை) மாலை 3.00 மணியளவில் அண்ணாநகர் மாநகராட்சி பள்ளி, அம்மன் கோயில் அருகில் நடைபெறுகிறது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் இ.ரவிகுமார் தலைமை வகிக்கிறார். சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப் பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர்கள் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், இரா. லட்சுமணன், வட்ட செயலாளர் கி.தேவன், இர. பொன்இளவரசன், லயோலா கே.மதன், வை. கௌதமன், ப.சோட சுந்தரமூர்த்தி, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாஸ்.டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம். லோகநாதன், டி.திராவிட செல்வி, பி.சீனவாசன், என். அனிபா, ஆர்.டி.ராஜா, கே. பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆகியோர் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குகின்றனர்.

மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன், ஏ.மணிமேகலை எம்.சி, ஏ. டி.மணி, என்.மருதுகணேஷ், வெ.சு.சத்தியநாராயணன், எஸ்.எம்.பரசுராமன், எம்.விமலா, டாக்டர். வை.கலைவாணன், வி. மூர்த்தி, சுசிலா, பி.விஜயா, என்பீல்டு துரைராஜ், டி.சங்கர், வி.கார்த்திக், ஜி.ஏழுமலை, எஸ்.எல்.சுந்தர், எம். பி.ஆர்.ராஜன், ஆர்.எ.எம். சசிகுமார், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜ், ப.குமார், ச.தமிழ் செல்வன், பொ.து.ராஜா, வி.வடிவேல், மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

என்.முருகேசன், இ.ரங்கநாதன், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## வலைதளங்களில் வலம் வருவது!

